


EJ 08 CITAACC JOURNAL 2026 | AUGUST



# திருக்குறள்

**குறள்:**

வாள்போல பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

**விளக்கம்:**

வெளிப்படையாக எதிரே வரும் பகைவர்களைவிட உறவாடிக் கெடுக்க நினைப்பவர்களிடம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

# நான் எழுதுவது கடிதம் அல்ல...



Mob: 94447 56355
Mail Id: citaaccmagazine@gmail.com
satheesh.subramaniam@gmail.com

**S.Satheesh**
Editor, CITAACC Magazine

அன்புள்ள நண்பர்களே

உங்களை இந்த சுதந்திர மாத CITAACC e-இதழ் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. ஆகஸ்ட் மாதத்தை நாம் அனைவரும் உவகையுடனும், ஆவலுடனும் எதிர் பார்ப்பது வழக்கம். காரணம், இந்திய தாய் திருநாடு அன்னிய கட்டு தலைகளில் இருந்து விடுபட்டு, சுதந்திரமாக செயல்பட்டது இம்மாதத்தின் பதினைந்தாம் நாளிலிருந்தே. இனிய சுதந்திரத்தை போற்றி பாதுகாப்போம்.

நம்முடைய CITAACC குழுவிலும் இம்மாதத்தில் ஏகப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தேறியுள்ளன, நடக்கவுமுள்ளன.

ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும், ஏற்பாடுகளும், கட்டமைப்புகளும் ஏராளம் ஏராளம். குழுக்கள் அமைத்து, தீவிர ஆலோசனை மேற்கொண்டு, சரியாக திட்டமிட்டு, ஒவ்வொரு பணியாக பார்த்து பார்த்து செய்து, அதன் முழு வெற்றி வரை, அயராது கடின உழைப்பினை நல்கும், செயல் வீரர்கள் உண்டு.

இவை அனைத்தும், வெற்றியெனும் நங்கையை களிப்புடன் முத்தமிடுவது, ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், அனைத்து உறுப்பினரும் பங்கேற்றால் மட்டுமே. அனைவரின் பங்கேற்பே, ஒரு நிகழ்விற்கு பூரணத்துவம் அளிக்கிறது. அழகு சேர்க்கிறது.

அரங்கு நிறைந்த நிகழ்ச்சிகளினால், ஏற்பாட்டாளர்கள் மனம் உவகையில் பொங்கும் அன்றோ? கடின உழைப்பின் அடையாளம் கண்டறியப்பட்டது எனும் உணர்வு ஏற்படும் அன்றோ?

அதற்கு, உறுப்பினர்களான தாங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று தான்; தவறாமல் கலந்து கொண்டு, நிறை குறைகளை, சம்பந்தப்பட்ட குழுவினருக்கு தெரிவிப்பதுவே. மென்மேலும், நிகழ்வுகள் மெருகேறும் என்பது திண்ணம். ஒரு சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர், தாம்பூலம் கொள்ளாமல் புறப்படுவது அழகன்று. எத்துணை சுவைமிகு விருந்தாயினும், முடிவில், தரிக்கும் தாம்பூலமே, மனதிற்கும், கலந்து கொண்ட பாங்கிற்கும், நிறைவு சேர்க்கிறது.

அவ்வாறே, கலந்து கொண்ட நிகழ்வுகளில், தங்களுக்கு ஏற்பட்ட இனிய அனுபவங்களை, சுவைபட, இனிப்பும், காரமும் சற்றும் குறையாமல், இதோ, எங்களுக்கு, ஆம், CITAACC e-இதழுக்கு , மடலாக வரைவது சால சிறந்தது.

உடன் கலந்து கொள்வீர்,
பெறுவீர் பேருவகையினை,
எடுப்பீர் ஏட்டினை எழுதுகோளினை,
வரைவீர் இனியதொரு மடலினை,
வந்தடையட்டும் எங்களுக்கு.
சுவைத்து மகிழ்வோம் நாம் அனைவரும்

வணக்கங்களுடன்
உங்கள்
அன்பு ஆசிரியர்.

**பொறுப்பு துறப்பு:**

இந்த இதழில் வெளி வரும் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் அனைத்திலும் உள்ள கருத்துக்களின் உண்மைத்தன்மை, நம்பகத்தன்மை, துல்லியம், பொருள் ஆகியவற்றிற்கு அவற்றின் ஆசிரியர்களே பொறுப்பாவார். CITAACC மின்னணுஇதழின் ஆசிரிய குழுவோ, CITAACC குழுவோ எவ்விதத்திலும் பொறுப்பாகாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆசிரியர் குழு

# FROM THE PRESIDENT'S DESK



**P.Saravanaraja**
President - CITAACC
1988 - Civil

Dear Friends,

One of the best events of CITAACC was undoubtedly "Run for Fun – August 2026."

A huge family gathering on an open ground, early in the morning, with one of the legends of Indian sports, Mr. Baskaran, Hockey Champion, as our Chief Guest… wow! It was indeed a great feeling of satisfaction and pride for all of us.

The organising team has made us truly proud. The great leadership of Sampath – 1997 Batch, with the solid support of Karnan – 1996 Batch and Ragul – 2016 Batch, made this wonderful event possible. The entire team of volunteers simply followed the captains' call at every moment and worked together as one team.

Congratulations to the entire Organising Committee! As a matter of fact, the most heartwarming aspect of the whole programme — and the one that makes all of us happiest — was the huge participation from our members and their families.

Yes, I sincerely mean it. The spirit, enthusiasm and togetherness of our CITAACC family were truly visible throughout the event.

But we aren't resting! We are already moving on to our next exciting milestone — the "Family Get-Together."

And this one is going to be even bigger, more memorable and more fun!

Let's continue the same spirit of togetherness, friendship and celebration. Calling upon you to register for the same and make it a big family get together ever conducted at citaacc CITAACC – Together We Create Memories! ❤

Let's get ready, friends!
Sincerely Yours ,
P.Saravanaraja

# FROM THE SECRETARY DESK



**Ashokraj Vadivelu**
Secretary - CITAACC
1993 - Mechanical

It is a pleasure to connect with all of you through our August edition.

The undisputed highlight of this month has been the phenomenal success of our **"Run for Fun"** event. We truly painted the streets of Besant Nagar red as hundreds of our alumni and their families came together in a spectacular display of energy, camaraderie, and community spirit.

The day before the event brought an unexpected twist, with heavy rains leaving many of us anxiously wondering how the weather would impact the proceedings. However, as event day dawned our concerns gave way to excitement as participants turned up in large numbers proudly sporting red and creating a vibrant sea.

What stood out most was the meticulous planning and flawless execution by our volunteers and organizing team. Each volunteer knew their role and was ready to step in wherever needed. Even when an SOS came from Point 1 regarding significant water stagnation and a possible route diversion, the team responded swiftly and efficiently. Once the event commenced, the iconic "red wave" flowed seamlessly through the course towards Adyar and back, creating a memorable sight for everyone present.

The success of any event is built on strong leadership, and this was evident throughout. Our organizing trio, **Sampath, Karnan, and Ragul**, did an extraordinary job coordinating the event and ensuring that every detail was taken care of. Their enthusiasm was infectious and soon spread to our sponsors as well. A special mention goes to **Gericare**, whose instant photo magnets became a super hit. While those magnets will adorn our refrigerators for a long time, the memories created that day will remain in our hearts forever.

I must admit that this Executive Committee has become pleasantly addicted to success. The overwhelming support and participation from our alumni fraternity continue to inspire us to dream bigger, aim higher, and deliver even more meaningful experiences for our community.

As this edition reaches you, preparations are in full swing for our much-awaited **Family Event on September 6th**. We encourage every member and family to join us and make the occasion yet another memorable celebration of togetherness and friendship.

I would also like to update everyone that several important administrative initiatives are progressing well. Our Treasurer and his team are diligently working on the statutory requirements, including the filing of audited reports. Simultaneously, plans for the upcoming **Annual General Meeting (AGM)** are underway, and further details will be announced shortly.

Before I sign off, I would like to make a very special acknowledgment. Behind every successful event is an individual whose dedication, energy, and commitment inspire everyone around him. There is one person who works tirelessly behind the scenes, continuously motivating the organizing team, engaging sponsors, and ensuring that our alumni remain connected, cheerful, and involved.

Three cheers to Ramesh Sir for his unwavering efforts and outstanding contribution to our association.

As always, thank you for your continued support and encouragement. I hope you enjoy this month's edition and look forward to meeting many of you at our upcoming events.

# Puzzles 3/26 with answers



ஷேக் சிந்தா மதார்
1970 Elec.

1.You are walking along a road which divides into two branches. One branch leads to a sure death while the other leads to easy escape. No sign board, nothing. One person is standing in the start of each branch. Both know well which with branch leads to what. One of them always speaks truth while the other is a perfect liar. You do not know which branch leads to what. Also you do not know who is the truth-teller and who is the liar. You are permitted to ask only one question to only one of them. What will you ask to assure your survival?

"If I ask the other man for the death road, which one he will show?" This will be my question. The road that comes as the answer is the escape road. Let's analyse the two possibilities:

**If I had asked the truth-teller:** The "other man" in my question being a liar, would have definitely shown me the escape road, as he never speaks truth. But this man whom I approached, always speaking truth, will also point to the same escape road.
**If I had asked the liar:** The "other man", being a truth-teller, would have definitely shown me the death road, as he always speaks truth. But this man, being a liar, will point to the other escape road.

So in both cases I would have been shown the escape road only.

2.A man is caught by a group of murderers and taken to their kingdom. The king says, "You are permitted to say one sentence. If that is true, you will be cut into pieces. If it is false, you will be roasted in the fire. The choice is yours". What sentence that clever man should say in order to escape using the opportunity?

He must say, "I shall be roasted in the fire"

As the sentence cannot be initially judged as true or false, first it will be assumed as true. According to their norms, he should be cut into pieces for a true sentence. When they take him for cutting, he will say, "I said I will be roasted, but you are going to cut me, so my sentence is false now"

So, for a false statement he should be roasted in the fire. But when they take him for roasting, he will say, "Look, my statement is true now, for which I should be cut into pieces"

By this way, his sentence becomes neither true nor false. Hence he is set free.

3.Solve: (C + I + T) x (C x I x T) = CIT.

Each alphabet represents a distinct digit and the RHS is a 3-digit number.

(1 + 3 + 5) x (1 x 3 x 5) = 135

**Puzzles 4/26**

1. What single math symbol when placed between the digits 3 and 8 gives us a value that is greater than the first and smaller than the second?
2. We don't need brains to say that the following is wrong. But we do need brains to rectify the equality by moving just one digit. 101 - 102 = 1.
3. A person who was born in London in 1946 died in 1966. Yet, he is said to have lived for 60 years. How can this be possible?

# Answer for the PUZZLES



**C.S.Lakshmi Narayanan**
1978 Mech

1. The answer is 3. Actually the clue is the number of the letters. For twelve it is 6 and for six it is 3. In the same way for ten it is 3 again.

2. The answer is 63 and 13. If the first passenger is born in 1963 his age will be 63 in 2026. If the second passenger is born in 2013 his age will be 13 in the year 2026.

3. The answer is surprisingly minimum one time only. Take 1 coin from the first bag, 2 coins from the second bag, 3 from the third and so on till 10 from the tenth bag. Now there will be total 1+2+3+……..+10=55 coins. Put all the 55 coins on the weighing scale and measure the weight. If all the coins are correctly 10 g each the total weight would have been 55 x 10 = 550 g. If the first bag contains 9 g coins the total weight would be 549 and if the second bag contains 9 g coins the total weight would be 548 g and so on till the tenth bag which would have weighed 540 g. So how much it is short of 550 g would indicate which bag contains the 9 g coins in just one time weighing.

A NEW KNOWLEDGE SERIES FOR BUSINESS LEADERS

# CORPORATE PLANNING ADVISORY

## FORTNIGHTLY ZOOM SERIES

Insights. Clarity. Strategy. Execution.

*Building Tomorrow's Stronger Enterprises Today.*



Every 15 days.

45 minutes.

One powerful insight. For your business.

LIVE ON ZOOM

FOR BUSINESS OWNERS, CEOs, COOs, CXOs & LEADERS OF MID-SIZED COMPANIES

STAY AHEAD.
PLAN BETTER.
GROW STRONGER.

The roadmap to ₹500 Crore and beyond.

## WHAT YOU CAN EXPECT

**STRATEGIC CLARITY**
Define the right direction

**BUSINESS GROWTH STRATEGY**
Identify new levers of growth

**ORGANISATION DESIGN**
Build the right structure for scale

**LEADERSHIP ALIGNMENT**
Align your team to the growth journey

**EXECUTION & PMO**
Build systems for consistent execution

**GOVERNANCE & PERFORMANCE**
Create accountability and measurable outcomes

## EACH SESSION WILL HELP YOU

- See your business from a higher perspective
- Make better strategic decisions
- Strengthen leadership and team alignment
- Build a future-ready organisation
- Create long-term value for your stakeholders
- Move from Founder-Driven to Institution-Driven

**WATCH THIS SPACE**
for Commencement Date

Join a community of forward-thinking leaders building the next decade of successful enterprises.


GNS

G N SIVARAMAKRISHNA
CORPORATE PLANNING ADVISOR
BUSINESS GROWTH ARCHITECT | BOARD ADVISOR

CONNECT WITH ME
gns@gnsconsultant.com
www.gnsconsultant.com
+91 98840 75963


VISION • STRATEGY • EXECUTION • GOVERNANCE • MEASURABLE OUTCOMES



# PEEL THE MASK

**SRINIVASAN**
**98 BATCH**

When was the last time,
You felt breeze flowing over your face?
You held plate of food in gratitude?
You closed your eyes to feel your breath?
Take a moment, reflect...
Gently close your eyes...
Feel your facial muscle for few seconds...
Is it tight? If so, try half a smile ...
Tightness in facial muscle is a sign of stress-within ...
Do you see yourself,
How many times in a day, you look in a mirror?
How many times in a day, do you look within?
Stress-within...
Stress-within is like a pressure cooker ...
It tries to portray calm outside but agitated within ...
Pressure cooker masks its agitation by whistling ...
So are humans! we mask it by anxiety, depression, anger etc...
Chaos ...
Stress-within is often masked...
these days, social fabric have accepted masking as norm ...
Many do-not even know their stress-within... a slow poison indeed ...
when it explodes, one wonder in disguise of chaos and permanent damage inflicted ...
But it's too late ...
Unmask yourself ...

Take your first step to unmask ...
Find a mirror to see your inner self ...
Spare few moments in a day to look within ...
Mindfulness, Mediation, Prayers are all meant to unmask oneself ...
Let's unmask, we all will be ok ...

2. *Unmasked and at Ease*

*What a wonder, you are!*
I seek you...
So does everyone.
Rich or poor.
Man or woman.
Young or old.
You treat everyone equally.
We look for you...
In joy and in sorrow.
You can begin in a moment...
And last a lifetime.
I can be me...
You can be you...
Yet, together feels natural.
Unmasked...
And at ease.
You can disappear without a clue...
And return from nowhere...
Yet, you remain the same as before.
When you are around...
Time melts...
Ego sleeps...
Endless laughter begins.

People long to have you.
Some have few.
Some have many.
Some even give their life for you.
For a few...
You become bigger than family.
Having you by my side...
Is a strength...
Nothing else can replace.
Are you, *FRIEND.
What a wonder you are...

---

## அறிவிப்பு

**நமது e-இதழுக்கு அனுப்பப்படும் கட்டுரைகள் அனைத்தும், கட்டுரை ஆசிரியரின் புகை படம், கல்லூரியில் படித்த வருடம், பிரிவு ஆகியவற்றுடன் அனுப்பப்பட வேண்டும்.**

**ஆசிரியர்**




# சகலகலாவல்லவன் சந்திரபாபு



&



KNK Sundaram
1985 - Mech

Satheesh.S
1985 - Civil

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் பல விநோதங்கள் உண்டு. கதாநாயகர், கதாநாயகியர் முக்கியத்துவம் பெரும் திரைக்கதையில், நகைச்சுவை எனும் ரசத்துக்கு இன்றிமையா பங்கு உண்டு.


கதையினையொட்டி, அல்லது முழுநீளத்திற்கு தனி பாதையில் (ட்ராக்) நகைச்சுவை படங்களில் அமைவது உண்டு. கதாநாயகன் கதாநாயகி ஆகியோரை மட்டுமே மையமாகக் கொண்டு அதையும் சம்பவங்களும் பின்னப்பட்டிருந்தாலும் நகைச்சுவை எனும் ரசம் சரிவிகிதத்தில் அமைக்கப்பட்ட திரைப்படங்கள் வெற்றி காண்பது உண்டு. இச்சுவை இல்லாத திரைக்கதைகள் வணிக அளவில் மற்றும் மக்கள் ரசனையில் வரவேற்பினை பெறுவதில்லை.

பேசும் படங்கள் வெளிவந்த காலத்திலும், அதற்கு முன்னரே கூட நகைச்சுவை நடிகர்கள் தொடர்ச்சியாக தமிழ் திரை வானில் ஜொலித்து வந்திருக்கின்றனர். தொன்று தொட்டு இவர்களின் ஆதிக்கம் திரை உலகில் வலுவாக அமைந்திருந்தது பொதுவாகவே ஒரு நகைச்சுவை நடிகர் பிரபலமாக இருக்கும் காலத்தில் முழுமையாக அவர் சார்ந்த திரைப்படங்களே வெளிவந்து வெற்றி பெறும். அவர்தம் காலம் முடிவடையும் போது, வளர்ந்து வரும் மற்றொரு இளம் நகைச்சுவை நடிகர் அப்பாரம்பரியத்தை தொடர்ந்து காத்து வருவார். இந்த இதழில், ஒட்டு மொத்த தமிழகத்தையே உலுக்கிவிட்ட ஒரு பெரும் நகைச்சுவை நட்சத்திரத்தைப் பற்றி பார்ப்போம்.



## ஜே.பி.சந்திரபாபு என்னும் அசகாய சூரன்

1927 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 04 ஆம் நாள் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள "தூத்துக்குடி" என்ற இடத்தில் 'ஜே. பி. ரோட்டரிக்ஸ்', என்பவருக்கும், 'ரோசரின்' என்பவருக்கும் மகனாக ஒரு கிறிஸ்துவக் குடும்பத்தில், பிறந்த ஜோசப் பிச்சை, குடும்பத்தினரால் பாபு என்று அன்புடன் அழைக்கப்பட்டு பின்னாளில் சந்திரபாபுவானார். இவருடைய தந்தை ஒரு சுதந்திரப்போராட்டத் தியாகி. சுதந்திரப்போராட்டக் காலத்தில், விடுதலைப் போரில் ஈடுபட்டு,



ஆங்கில அரசால் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டதால், சிறிதுகாலம் இக்குடும்பம் இலங்கையில் வாழ்ந்து வந்தது. இதனால், தன்னுடைய பள்ளிப்படிப்பை கொழும்பிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்தார். சிறுவயதிலேயே பாடும் திறமையைப் பெற்றிருந்த அவருக்கு, எப்படியாவது சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆர்வமும் அதிகம் காணப்பட்டது. அதுமட்டுமல்லாமல், மேல்நாட்டு உடைகள், பாவனைகள், கலச்சாரங்கள் போன்றவற்றின் மீது அலாதியான ஈடுபாடு இருந்தது

சினிமாவில் நுழைய முயன்று தோல்வி அடையவே, விஷம் அருந்தி தனது உயிரைவிட முயன்றார். இது தொடர்பான வழக்கும், நீதி விசாரணையின் போது பாபுவின் வழக்கமான சேஷ்டைகளில் தமது கவனத்தை ஈர்க்கவே, திரை இயக்குனரும் தயாரிப்பாளருமான வாசன், 1947 இல், தனது படமான 'தன அமராவதி' இல் சிறிய வேடமொன்றில் வாய்ப்பளித்தார். அதன் பிறகு, T.R.மகாலிங்கத்துடன் 'மோகனசுந்தரம்' எனும் படத்தில், G.சகுந்தலாவுடன் மிக அற்புதமாக நடித்து புகழ் பெற, அனைவரின் கவனமும் இவரை நோக்கி திரும்பியது. தொடர்ந்து தாய் உள்ளம், சின்ன துரை, மூன்று பிள்ளைகள், படங்கள் மூலம் புகழ் பெற தொடங்கினார். சிவாஜி கணேசனுடன், 'கண்கள்' (1953) எனும் படத்தில் இணைந்து நடிக்க ஆரம்பித்தார். வெகு சீக்கிரத்தில் திரை உலகின் மும்மூர்த்திகளான எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி ஆகியோருடன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க தொடங்கினார் சந்திரபாபு.

பி.ஆர்.பந்துலு தயாரிப்பில், ப.நீலகண்டன் இயக்கத்தில், வெளியானது சபாஷ் மீனா. முழு நீள நகைச்சுவை படமான இதில், சிவாஜியை ஒப்பந்தம் செய்திருந்தனர். அவர் ஆலோசனையின்

பேரில், நண்பன் கதாபாத்திரத்திற்கு சந்திரபாபு நடிக்க அழைக்கப்பட்டார்; அதில் பாபு, தனது சம்பளத்திற்கு போட்ட கண்டிஷன், 'சிவாஜி கணேசனுக்கு கொடுப்பதை விட ஒரு ரூபாய் அதிகமாக கொடுக்கவேண்டும்' என்பது. இப்படத்தில் இன்னொரு அதிசயம், அப்போது, பல படங்களில், MGR க்கு இணையாக நடித்து வந்த சரோஜா தேவி, சந்திரபாபுவுக்கு ஜோடியாக நடித்திருப்பார். இரு வேடங்களில் சந்திரபாபு இப்படத்தில் நடித்திருப்பார். ஒரு வேடம் படித்த இளைஞனாகவும், இன்னொன்றில் ரிக்ஷா தொழிலாளியாகவும் வருவார். இருவரும் இடம் மாறி செல்ல, படம், ஒரே சிரிப்பு மயம்தான். ஒரு காட்சியில், சிவாஜி, தனது நண்பன் என தவறாக புரிந்துகொண்டு, "டேய்" என்று கூறிவிட , 'எனக்கு சோறு போடுகிறவனே, மாப்ளே இங்கிறான், நீ என்னடான்னா டேய் இங்கிறே, உன் மூஞ்சிலே என் பீச்சாங்கையே வைக்க" என்று கூறியவாறு "சொத்" என்று சிவாஜியின் முகத்தில் ஒரு குத்து விட்டிருப்பார். இன்று அக்காட்சியை பார்த்தாலும், தத்ரூபமாக இருக்கும் அவரது நடிப்பு. மதராஸ் பாஷையில் பட்டையை கிளப்புவார் இந்தப் படத்தில். மற்றொரு காட்சியில், தன்னை தேடி வரும், SVR இடமிருந்து தப்பிக்க, ஓடிவந்து, சோபாவை தாண்டி, அருகிலிருக்கும் பீரோவுக்குள் ஒளிந்து கொள்வார். இதெல்லாம் ஓரிரு நொடிகளில் நடைபெறும். அதேபோல், இவரை தவறாக புரிந்துகொண்டு, ஒரு ஆலமரத்தில் உண்மையாகவே, தலை கீழாக தொங்கவிட்டு வேப்பிலை அடிப்பார்கள், இன்று வரை, இந்த பாணியை, எந்த நகைச்சுவை நடிகரும் கடைபிடித்ததாக தெரியவில்லை.


சிறந்த நடிப்பு மட்டுமின்றி, அக்காலத்திலேயே ஹாலிவுட் திரை நட்சத்திரங்கள் போன்ற மிக நேர்த்தியான நடை, உடை, பாவனை கொண்டவராக திகழ்ந்தார். தன்னுடைய சொந்த குரலில் பாடும் திறமை இவருக்கு உண்டு. சிவாஜிக்கு குரல் கொடுத்து பாடல் பாடியிருந்தார். வீணை S.பாலச்சந்தர் நடனமாடிய "கல்யாணம் கல்யாணம்" என்ற பாடல் சந்திரபாபு பாடியது தான். "நான் ஒரு முட்டாளுங்க", "குங்குமப்பூவே, கொஞ்சுபுறாவே" "கோவா மாம்பழமே மல்கோவா மாம்பழமே" "பிறக்கும் போதும் அழுகின்றான் இறக்கும் போதும் அழுகின்றான்" போன்ற சாகா வரம் பெற்ற பாடல்களை இவர் பாடியது. இப்பாடல்களுக்கு, நடனமும் இவரே அமைத்து ஆடுவது, ரசனை மாறிய இக்காலங்களில் பார்த்தாலும், உள்ளம் கொள்ளை போகும். "புதையல்" படத்தில் வரும் "உனக்காக எல்லாம் உனக்காக" என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் வரிகளுக்கு, குரல் கொடுத்து, காட்சியில் நடனமும் பாடியிருப்பார். ஒரு மேசை மீது, லாவகமாக அவர் ஆடும் அந்த நடனம், அவர் கலையை எந்த அளவிற்கு நேசிப்பவர் என்பது தெரியும்.

நாடோடி மன்னன் திரைப்படத்தில், ஒரு காட்சி தத்ரூபமாக வர வேண்டும் என்பதற்காக, தன் வாயில், உயிருள்ள கோழி குஞ்சு ஒன்றை, போட்டு விழுங்கி விட்டு, அப்படியே வாயில் இருந்து எடுக்கும்

காட்சி மெயசிலிர்க்க வைக்கும். "ரத்த கண்ணீர்" படத்தில், மாடிக்கு படிகள் வழியாக ஓடி போய், செய்தி கேள்விப்பட்ட உடன், தலை கீழாக படி வழியாக உருண்டு வந்து விழும் காட்சி, அவர் உயிரையும், பாதுகாப்பையும் பணயம் வைத்து நடித்தது. "ஆண்டவன் கட்டளை" படத்தில் "சிரிப்பு வருது சிரிப்பு வருது" பாடல் காட்சியில் (பாடியது பாபு), பேருந்து மேலிருந்து அப்படியே எந்த ஒப்பனையும், ஏற்பாடும் இல்லாமல் தீடீரென கீழே குதிப்பார்; இது ரசிகர்களை சற்றே அதிர்ச்சி அடையவைத்தாலும், உடன் சிரிப்பலையில் மூழ்கி விடுவார்கள்.

ரசிகர்களை நெஞ்சார மகிழ்ச்சி கடலில் மூழ்கடித்த பாபு, தனது சொந்த திருமண வாழ்வில், சோகத்தில் நீந்தினார். ஆசையுடன் கைப்பிடித்த பெண், (திரைப்பட முன்னோடி கோவை சாமிக்கண்ணு வின்சென்ட்டின் பேத்தி வேறொருவரைக் காதலிப்பதாகக் கூறவே, தன்னுடன் வாழ விரும்பவில்லை என தெரிந்ததும், அவரை மரியாதையுடன் அனுப்பி வைத்தார். இது, அன்று முதல் இன்று வரை திரையில் தோன்றிய, எந்த நாயகரும், திரையில் கூட ஏற்றிராத பாத்திரம்





1965இல் இந்தியா - பாக் யுத்தம். வெற்றி பெற்ற இந்திய வீரர்களை பாராட்ட தென்னிந்திய நடிகர்கள் குழு சிவாஜி கணேசன் தலைமையில் திரண்டு, கலைநிகழ்ச்சிகள் நடத்தி, ராணுவ வீரர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். தமிழகம் திரும்பும் முன், மரியாதையை நிமித்தம் அனைத்து கலைஞர்களும் குடியரசு தலைவரை அவரது மாளிகையில் சந்திக்க சென்றிருந்தனர். அப்போதைய குடியரசுதலைவர், சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள், கூடியிருந்த கலைஞர்களை பார்த்து, ' யாரவது பாடுங்களேன்' என்று கேட்க, MSV அவர்கள், ஒரு ஹார்மோனிய பெட்டியுடன், 'பிறக்கும் போதும்..." எனும் பாடலுக்கு இசை அமைக்க, சந்திர பாபு, பாட துவங்க, அதனை மிகவும் ரசித்து கேட்டார், குடியரசு தலைவர். 'அற்புதம், சிறந்த வரிகள், நல்ல பாடல்' என்று வாய் நிறைய பாராட்டியதுதான், தாமதம், சந்திரபாபு யாரும் எதிர்பாராத வகையில் ஓடி சென்று இராதாகிருஷ்ணன் அவர்களின் மடி மீது ஏறி உட்கார்ந்து, அவர் மோவாய்ஜ தடவி, "நல்ல ரசிகன்டா கண்ணா நீ" என்று கூறினார். கூடியிருந்த அனைவரும் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போக, சற்றும் எதிர்பாராத வகையில் குடியரசு தலைவரும் சிரித்துக்கொண்டே, ரசித்தாராம். இது ரசனை, கலை என்று வந்து விட்டால், தன்னிலை மறந்து போகும் கலைஞர் இவர், என்பதற்கு சிறந்த உதாரணம். .

ஏவிஎம் நிறுவனம் 'சகோதரி' எனும் படத்தை எடுக்க, அதன் காட்சி, கதை அமைப்பில் பெரிதும் திருப்தி அடையாத ஏவிஎம் அதிபர் மெய்யப்ப செட்டியார் உடனே 'பாபுவை வர சொல்லுங்கள்' என்று கூற, வந்த பாபுவிடம், 'உனக்கு பத்து நாட்கள் தருகிறேன், இந்த படத்தை தேற்றுவது உன் பொறுப்பு. எவ்வளவு சம்பளம் வேண்டும்' என வினவ,

உடன் பாபு 'ஒரு லட்சம் கொடுங்கள், நான் இந்த படத்தை வெற்றி படமாக மாற்றுகிறேன்' என்றாராம். இதற்கு சற்றும் ஒத்து கொள்ளாத செட்டியார், 'பத்தாயிரம் ரூபாய் மட்டும் தான்' என்று கட்டளை இட, அவரிடம் வாக்கு வாதம் செய்து, அவரை சம்மதிக்க வைத்தாராம் பாபு. பின், தனக்குரிய நகைச்சுவை பகுதியை, தானே, வசனம் எழுதி, படப்பிடிப்பு நடத்தி, கண்ணதாசன் அவர்களை அழைத்து, ஒரு பாட்டு எழுதும் படி கேட்டு, அதன் படி கண்ணதாசன் எழுதிய பாடல்தான், இன்றளவும் புகழ் பெற்ற, 'நான் ஒரு முட்டாளுங்க' பாடல்.



ஏழே நாட்களில், முழு படப்பிடிப்பு முடிந்து, காட்சிகள், சரியான இடங்களில் இணைக்கப்பட்டு, படம், முழு வெற்றி பெற்றது. அப்போதைய முன்னணி நட்சத்திரங்கள் வெறும் எழுபது, எண்பது ஆயிரங்கள் சம்பளம் வாங்கி கொண்டு இருந்த கட்டத்தில், பாபு ஒரு லட்சம் வாங்கியது மிகுந்த பரபரப்புக்குள்ளாகியது.

இதே நேரத்தில், கண்ணதாசன் சொந்த தயாரிப்பில் பாபு நடிக்க 'கவலை இல்லாத மனிதன்' எனும் படம் எடுக்கப்பட்டு, நல்ல கதை, பாடல்கள், சிறந்த நடிப்பு இருந்தும், சரியான நேரத்தில் வெளிவராத காரணத்தால், படம் தோல்வி அடைந்து, கண்ணதாசனை கவலைக்கு உள்ளாகியது. 'தன் சொந்த குணாதிசயங்களால் தன்னையும் பிறரையும் வருத்துவார் பாபு' என கண்ணதாசன் குறிப்பிட்டார்

MGR அவர்களுக்கு பாபு கதை ஒன்று சொல்ல, அது MGR க்கு மிகவும் பிடித்து போயிற்று. 'இந்த படத்தை நீங்கள் எடுங்கள் பாபு சார் (அப்படிதான் மரியாதையுடன் அழைப்பாராம் MGR) நான் நிச்சயம் நடிக்கிறேன்' என்று உறுதி அளித்தாராம். பின்னர் ஏற்பட்ட சில விரும்பத்தகாத நிகழ்வுகளால், 'மாடி வீட்டு ஏழை' படப்பிடிப்பு முதல் காட்சியுடன் அப்படியே நின்று போனது. மிகுந்த பொருட் செலவில் போடப்பட்ட செட், கடன் சுமையை பாபுவுக்கு ஏற்படுத்தியது. இதில் இருந்து மீள முடியாமல் திணறினார் பாபு. MGR-இன் கால் சீட் குறித்து கேட்க, அவரது அண்ணனான MG சக்ரபாணியை சந்திக்க செல்ல, அப்போது நடந்த வாக்கு வாதங்களினால, படப்பிடிப்பு மொத்தமாக நின்று போனது.




இதன் பின் பாபு நிமிர்ந்து நிற்கவே முடியவில்லை. இதன் இடையில், போட்டியாக, 'தட்டுங்கள் திறக்கப்படும்' எனும் திரைப்படத்தை இயக்கி வெளியிட்டார் பாபு. மிக சிறந்து நடிப்பு, சிறந்த கதையம்சம் ஆகியவை இருந்தும், அதீத சோகமயமாக காட்சிகள் இருந்ததால், படம் தோல்வியை தழுவியது. இது மேலும், பெருத்த அடியாக பாபுவுக்கு விழுந்தது. தீராத மது பழக்கம், வாழ்க்கையில் தோல்வி, கடன் சுமை எல்லாம் சேர்ந்து கொள்ள, கொஞ்சம் கொஞ்சமாக, அவர் கரைந்து போனார். அதன் பின்னரும், MGR-இன் 'அடிமை பெண்', சிவாஜியுடன் ' நீதி' ஆகிய படங்களில் நடித்தாலும், அவரின் பழைய தோரணை முற்றிலும் மாறி பரிதாபமாக போனது.

ராஜ வாழ்க்கை வாழ்ந்து, சென்னை கிரீன்வேஸ் சாலையில் 20 கிரவுண்ட் நிலம் வாங்கி, தமது கார் நேரடியாக மாடிக்கே செல்லும் வகையில் வடிவமைத்து, கட்டினார். ஆனால், கடனுக்கு ஈடு செய்ய அந்த சொத்துக்கள் எல்லாம் முழுகி போனது.

அவருக்குப் பொதுவாகவே தன் நடிப்பின் மீது எப்பொழுதும் ஒரு கர்வம் உண்டு, ஆகையால் 'நினைத்ததை செயல்படுத்தியே தீருவேன்' என்ற பிடிவாத குணம் என்பதால் பலரால் திமிர் பிடித்தவன் என்று புரிந்துகொள்ளப்பட்டார். இதனால், சர்ச்சைகளும் சக நடிகர்களுடனான சச்சரவுகளும் அவரைச் சூழ்ந்தே இருந்தன.

நினைத்ததை உடனே பேசும் பழக்கம், கட்டுப்பாடற்ற செயல்பாடுகள், சட்டென்று முளைக்கும் முன்கோபம், இவை எல்லாம், திரைக்கு பின்னாலும் முக பூச்சு நிறைந்த உலகில், அவரை தனிமை படுத்தி காட்டியது. இவரது பத்திரிக்கை பேட்டிகள், சர்ச்சைகளுக்கு நல்ல தீனி போட்டவை,



சகநடிகர்கள், கலைஞர்களுக்கு சிம்ம சொப்பனம். இவரது வாயில் இருந்த வந்த சொற்களே இவருக்கு எதிரியாய் போனதுதான் விதி.

தமிழில், முதன்முதலில் 'யொடெல்லிங்' பாடல் முறையை அறிமுகப்படுத்தியவர், சொந்த குரலில் அற்புதமாக பாட கூடியவர், எந்த நடன அமைப்பாளரும் அமைத்து கொடுக்க முடியாத நடன அசைவுகள் தெரிந்த ஒரு கலைஞர், பிரமாதமாக நடிக்க கூடிய திறன், உண்மையை மட்டுமே பேச கூடிய, எதற்கும் வளைந்து கொடுக்க தெரியாத குணம், இவை எல்லாம் இருந்தும், திரைக்கு முன்னும் பின்னும் நடிக்க தெரியாத இவரின் வாழ்க்கை, பின்னால் வந்த அனைவருக்கும் படிப்பினை.

“Maverick Genius” எனும் ஆங்கில சொல்லுக்கு மிக பொருத்தமான மஹாகலைஞன் சந்திரபாபுவை தவிர்த்து தமிழ் சினிமாவின் சரித்திரத்தை எழுத முடியாது...! காலம் என்றென்றும் அவரை பொக்கிஷமாக பாதுகாக்கும். வாழ்க அவர் புகழ்!!!

மீண்டும் அடுத்த இதழில் ஒரு பிரபல கலைஞருடன் சந்திப்போம்


care HEALTH INSURANCE
Health ki Guarantee
CARE Supreme Enhance
Affordable ₹1 Crore Health Cover with Aggregate Deductible
BEST CLAIM SETTLEMENT COMPANY OF THE YEAR^
9TH ANNUAL INDIA INSURANCE SUMMIT & AWARDS 2025
₹1 CRORE HEALTH PROTECTION
COMPLETE CARE. COMPLETE CONFIDENCE.
KEY HIGHLIGHTS
UNLIMITED AUTOMATIC RECHARGE
• Unlimited reinstatement in a Policy Year
• Covers same or unrelated illnesses
CUMULATIVE BONUS
• 10% bonus every claim-free year
• Up to 100% of Base Sum Insured
• Bonus is not reduced even after claims
COMPREHENSIVE HOSPITALIZATION COVER
• No limit on ICU charges
• No sub-limits on modern treatments
• 60 days Pre & 90 days Post hospitalization
ADDITIONAL BENEFITS
• AYUSH treatment cover
• Organ donor expenses covered
• Domiciliary hospitalization covered (3 consecutive days or more)
One Policy. Covers Entire Family. Cover yourself, your spouse, children and parents under a single policy (Family Floater).
Longer Policy Term. Choose policy tenure of 1 / 2 / 3 Years for more convenience.
HASSLE-FREE CASHLESS TREATMENT
Cashless treatment at 10,000+ network hospitals across India.
We settle the bills directly – you focus on recovery.
IDEAL FOR
Existing health insurance policyholders with ₹5L – ₹15L cover
Employees covered under Corporate Health Insurance
Families looking for ₹1 Crore protection at affordable premiums
AGGREGATE DEDUCTIBLE IN A POLICY YEAR
You pay the deductible (e.g., ₹5 Lakh) from your own pocket. pocket. Once the eligible claims cross the deductible, CARE Supreme Enhance pays 100% of further eligible expenses up to the Sum Insured.
₹1 CRORE (100 LAKHS) AMOUNT
CARE SUPREME ENHANCE COVERS AMOUNT ABOVE DEDUCTIBLE (UP TO ₹1 CRORE)
After eligible claims cross ₹5 Lakh, we pay 100% of further eligible expenses up to ₹1 Crore.
₹5 LAKHS (DEDUCTIBLE)
YOU PAY DEDUCTIBLE (AGGREGATE IN A POLICY YEAR)
You pay the first ₹5 Lakh (aggregate) in a policy year.
0
Examples of Deductible Options:
₹5 Lakh
₹7 Lakh
₹10 Lakh
₹15 Lakh
No Sub-limits on Modern Treatments
No Limit on ICU Charges
Organ Donor Cover
AYUSH Treatment Cover
Unlimited Automatic Recharge
Cumulative Bonus up to 100%*
For more details, contact: Anand Kumar +91 85084 81835
*10% of Sum Insured per year, max up to 100% of Sum Insured ^The Company Was Awarded 'Best Claim Settlement Company of The Year' Award At The 9th Annual India Insurance Summit & Awards 2025, in March 2025 **Other Sum Insured options are also available.


HI-TECH REALTY
Your Trusted Real Estate Partner in Chennai
Buy | Sell | Rent | Property Management | Advisory
Expert guidance for residential, commercial, and investment properties. We help buyers, sellers, landlords, NRIs, and investors with transparent, professional real estate solutions.
Property Sales
Property Rentals
Property Management
Real Estate Advisory
Professional. Transparent. Reliable.
Call / WhatsApp: 75502 64658
www.hitechrealty.in
care@hitechrealty.in
No.1, Dr. Thirumurthy Nagar Main Road, Nungambakkam, Chennai - 600034

# CITAAC FAMILY RUN EVENT



### FROM THE EYES OF 13-YEAR-OLD HARSHITHA RAMESH, DAUGHTER OF M. RAMESH 1983 CHEMICAL





On August 9th 2026, was our family run event. The motto was

AGE IS JUST A NUMBER FOR A CITAACC MEMBER

Honestly, I was shocked to see 250 participants from batch 1962 to 2021, who were looking forward for this event. At morning 6:30 the Olympic champion of Hockey Mr. Baskaran, (I was fortunate to click a picture with him and got introduced to him) gave us the green flag.

It was 5 km race. The route volunteers encouraged us to keep going. There were many people who were running and walking. I ran my very first km by seeing the sunrise in Besant Nagar beach. And I continued to run as quick as possible. My father's classmates were encouraging me throughout. They were cracking jokes and making fun of me and we all had a

great run.

As I reached to the finish point, I made my way to hydration point where, I was desperately looking for water, the CITAAC members gave us water, juice and what not. The traffic police changed our route and made us run to the opposite direction to avoid rain water, as it was raining that day. For the very first time I ran 2.5 km in 45 minutes. I could not run the way back so I had to walk the other 2.5 km to complete the 5 km race. I was very demotivated to see on my back some elderly CIT alumni wearing red T shirts walking past me. I kept reminding myself 'Harshi, how can you let elderly people: uncles and aunties walk faster than you?' Then I picked up my pace and ran for the last 1 km. At the finishing line my father who is the vice president for CITAAC was standing along with the President of CITAAC. It was a truly proud moment where I received the medal from the president Mr. Saravana Raja uncle!

For a moment I sat down and was thinking about my favorite subject Physics. I remember learning a formula where

Average speed = Distance / Total time taken

I remember calculating the average speed for cars, and why not myself!

The distance I ran was 5 km; the time I took was 1.5 hours if we divide both of them, I get 3.3 km/h. I was proud of this achievement of mine. I clicked my photos in the photo booth and got a fridge magnet printed.

Then I went to the breakfast area where I was amazed to see so many dishes, even in a marriage you cannot see these many dishes. I saw hot pooris were made in a ground and reaching people's plates. And on the right side I saw Akshaya Kalpa milk where they were giving buttermilks for free to all of us. After tasting the buttermilk, I was speechless. I had never tasted such organic milk products.

Then I saw drones flying over us and capturing our memorable moments. Overall, a wonderful event where from elderly to young people participating, a huge appreciation to CITAACC Team whose effort made this possible. Months before this event I could witness google meet calls where my father and the president were discussing with the team and it will go for hours together every single week. Once again Thank you CITAACC for this wonderful memory!










Hot off the ramp.



# கரிம வரவின வணிகத் திட்டம்




பால.பன்னீர்செல்வம்
1983 - வேதிப்பொறியாளர்

காலநிலை மாற்றத்திற்கான பாரிஸ் ஒப்பந்தம் 2015இல் 195 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை (Nationally Determined Contributions) தயாரித்து, வெளியிட்டு, தொடர்ந்து பங்களிப்புகளை மேன்மைபடுத்தி பராமரிக்க ஒரு சட்டத்தேவையை நிறுவியது. இது நாடுகளுக்கு ஆணையிடும் முறையை தவிர்த்து, நாடுகளே தன்னிச்சையாக தங்கள் காலநிலை இலக்குகளை தங்களது தேசிய சூழலுக்கேற்ப முடிவு செய்து கொள்ள தீர்மானித்தன. இதன் அடிப்படையில் இந்தியா இலக்குகளின் முதல் தொகுப்பை 2015 லும், மேம்படுத்தப்பட்ட இலக்குகளை 2022லும் வெளியிட்டது. மேலும் இலக்குகள் மேம்படுத்தப்பட்டு NDC 3.0வாக இந்த ஆண்டு ஏப்ரலில் அனுப்பப்பட்டு இருக்கிறது.

**இலக்குகள்:**

தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட இலக்குகள் 3.0 , மூன்று முக்கிய இலக்குகளை கொண்டது. ஒன்று, உமிழ்வுத் தீவிரம் (Emission intensity) 2005 ஆம் ஆண்டு அளவில் இருந்து 47% குறைக்கப்பட வேண்டும். இரண்டாவதாக புதைவடிவ எரிபொருள் இல்லாத ஆதாரங்களின் (சூரிய, காற்று, அணுமின் நீர்மின் மற்றும் உயிர்திரள் ஆற்றல்கள்) மூலம் மின்னாற்றலின் நிறுவப்பட்ட கொள்ளளவில் 60 சதவிகிதத்தை அடைவது. மூன்றாவதாக கார்பன் உறிஞ்சி அல்லது மடு (carbon sink) அளவை அதிகரிப்பது. காடுகள் மற்றும் மரங்களின் பரப்பை அதிகரித்து 2005 ஆம் ஆண்டு அளவிலிருந்து 3.5 முதல் 4.0 பில்லியன் டன் கரியமில வாயுக்கு ஈடான கார்பன் உறிஞ்சும் அளவை அதிகரிப்பது. இலக்குகள் அனைத்தையும் 2035க்குள் அடைய வேண்டும்.

**கரிம வரவின வணிகத் திட்டம் :**

தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைய இந்தியா பல பெரிய அளவிலான திட்டங்களை முன்னெடுத்து நிறைவேற்ற செயல்பட்டு வருகிறது. இதில் முக்கியமான திட்டம், தொழிற்சாலைகளில் உமிழ்வுத் தீவிரத்தை கட்டுக்குள் கொண்டுவர இந்திய கரிம சந்தை (Indian carbon market) மூலம் கரிம வரவின வர்த்தக திட்டத்தை (Carbon credit trading scheme) செயல்படுத்துவது. இந்த திட்டம்

ஆற்றல் பாதுகாப்பு (திருத்தப்பட்ட) சட்டம் 2002ன் படி 28 ஜுன் 2023 இல் அறிவிக்கப்பட்டது. சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986ன் அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கான உமிழ்வுத் தீவிர இலக்குகளை அறிவிக்கும். இதற்கான நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் விதிமுறைப் பின்பற்றுதல் செயல்முறைகள் உருவாக்கத்தில் மின்சக்தி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் BEE (Bureau of Energy Efficiency) உதவியுடன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதிக ஆற்றலை பயன்படுத்தும் தொழிற்துறைகள் இந்த திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அந்த துறைகளில் இயங்கும் தொழிற்சாலைகளுக்கு இலக்குகள் நிர்ணயக்கப்படுகிறது. குறிப்பிட்ட ஆண்டுகளில் இலக்குகளை எட்டும் நிறுவனங்களுக்கு கரிம வரவின சான்றிதழ்கள் வழங்கப்படும். அந்த நிறுவனம் இலக்கை விட அதிகமாக சாதிக்கும் போது அதற்கேற்றாற்போல் அதிக சான்றிதழ் கிடைக்கும். ஒரு கரிம வரவினம் என்பது ஒரு டன் கார்பன்டை ஆக்சைடு. இலக்கைவிட எவ்வளவு டன் குறைக்கப்பட்டிருக்கிறதோ அதே எண்ணிக்கையில் சான்றிதழ்கள் கிடைக்கும். அதை சந்தையில் விற்று வருமானம் ஈட்டிக் கொள்ளலாம். நிறுவனம் இலக்கை விட குறைவாக சாதிக்கும் நிலையில் சான்றிதழ்களை சந்தையிலிருந்து வாங்க வேண்டும். இது நிறுவனத்துக்கு இழப்பாகும்.

### பசுமை இல்ல வாயுக்கள்:

பசுமை இல்ல முக்கிய ஏழு வாயுக்களான கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஹைட்ரோபுளோரோகார்பன், பெர்புளோரோகார்பன், சல்பர்கெக்சா புளோரைடு, நைட்ரஜன் டிரை புளோரைடு ஆகியவற்றில் இத்திட்டத்தில் கரியமில வாயு ($CO_2$), பெர்புளோரோ கார்பன் (Perfluorocarbons) மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

கரிம வரவின திட்ட இணக்க இயங்கசைவின் (compliance mechanism) கீழ் ஒன்பது தொழிற்துறைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதில் இரும்பு மற்றும் எஃகு, சிமெண்ட், பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைகள், உரத்தொழிற்சாலைகள், அலுமினியம், குளரோ ஆல்கலிஸ், பெட்ரோ கெமிகல்ஸ், காகிதகூழ் மற்றும் காகிதம், ஜவுளி ஆகியவை அடங்கும்.

இணக்க இயங்கசைவின் வரும் தொழிற்துறைகள் இல்லாமல் சிறு, குறு, நடுத்தர தொழில்கள், வேளாண்மை, வனத்துறை போன்றவை தன்னார்வ இயங்கசைவின் கீழ் வரும். இவை ஈடு செய் இயங்கசைவு (offset mechanism) என அழைக்கப்படுகிறது.

### தரநிலை 14064:

ஐஎஸ்ஓ (ISO) தரநிலை 14064 பசுமை வாயுக்களின் உமிழ்வின் அளவை கணக்கிடவும், கண்காணிக்கவும், தெரியப்படுத்தவும் மேலதிகமாக சரிபார்க்கவும் உருவாக்கப்பட்டது. இது ஒரு தொழில் நிறுவனம் ஒன்றிய, மாநில அரசுகளின் கட்டாயம் பின்பற்ற கூடிய பசுமை வாயு உமிழ்வு குறித்த ஒழுங்குமுறைகளை கடைபிடிக்கவும் கரிம வரவின வர்த்தக திட்டத்தில் திறம்பட பங்கேற்க உதவுகிறது. இந்த தரநிலை (Standard) மூன்று பகுதிகளை கொண்டது.

140641 எனப்படும் இந்த பகுதி நிறுவன

அளவில் நிறுவனத்தின் பசுமை வாயுக்களின் இருப்புநிலையை (Inventory) நிறுவுகிறது. உமிழ்வை ஏற்படுத்தும் ஆதாரங்களை கண்டறியவும், எல்லைகளை நிறுவவும், தரவுகளின் தரத்தை நிர்வகிக்கவும் உதவுகிறது.

140642 பகுதி திட்ட அளவிலான வழிமுறைகளை வழங்குகிறது. உமிழ்வை குறைக்கவும நீக்கவும் தேவையான செயற்பாடுகளை அளவிட, கண்காணிக்க, அறிக்கையளிப்பதில் கவனம் செலுத்துகிறது.

140643 பகுதி தணிக்கையாளர் பசுமை வாயுக்களின் உமிழ்வுக்கான தரவுகளை அணுகவும், கட்டுப்பாட்டு அமைப்புகளை மதிப்பிடவும், உறுதிசெய்து சரிபார்க்கவும் (validation and verification) வழிநடத்த உதவுகிறது.

செயற்பரப்பு:

14064 தரநிலை மூன்று வகையான செயற்பரப்பை (Scope) கொண்டது.

செயற்பரப்பு1 : நிறுவனத்தின் நேரடி கட்டுப்பாட்டில் அல்லது நிறுவனத்துக்கு சொந்தமான ஆதாரங்களில் இருந்து வெளிப்படும் நேரடி பசுமை வாயுக்களின் உமிழ்வை பற்றியது. எடுத்துக்காட்டாக, நிறுவனத்திற்கு சொந்தமான கொதிகலன், உலைகள், மின்னாக்கிகளில் பயன்படுத்தப்படும் எரிபொருள்களை எரிப்பதன் மூலம் வரும் உமிழ்வுகள்.

செயற்பரப்பு 2 : நிறுவனம் தன் பயன்பாட்டிற்காக வெளியிலிருந்து, குறிப்பாக மின்கட்டமைப்புகளில் இருந்து பெறும் மின்சக்தி, நீராவி போன்றவை பற்றியது.

செயற்பரப்பு 3: நிறுவனத்தின் மதிப்பு சங்கலியில் முன்கட்டத்துறைகள், பின்கட்டத்துறைகள் வெளிபடுத்தும் உமிழ்வுகள் குறித்தது. எடுத்துக்காட்டாக, மூலப்பொருள்கள் கொண்டு வர பயன்படுத்தும் போக்குவரத்து உமிழ்வு.

தரநிலை இரு வகையான உத்தரவாதத்தை விளக்குகிறது. நியாயமான உத்தரவாதம் என்பது நிறுவனத்தின் அறிக்கையில் உள்ள பசுமை வாயுக்களின் உமிழ்வுக்கும் தணிக்கையாளர் சரிபார்த்தலில் கணக்கிடப்பட்ட உமிழ்வுக்கும் உள்ள வேறுபாடு 25 சதவிகிதத்துக்குள் இருக்க வேண்டும். மற்றொரு உத்தரவாதம், வரையறுக்கப்பட்ட உத்தரவாதம். இது மொத்த உமிழ்வில் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு 5-10 சதவிகிதம் வரை இருக்கலாம்.

உமிழ்வு தீவிரத்தை கணக்கிடல்:

தொழில் நிறுவனத்தின் உமிழ்வு தீவிரத்தை கணக்கிட முதலில் ஒவ்வொரு செயற்பரப்பிலும் உமிழ்வு அளவு கணக்கிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக கொதிலன்கள், உலைகலன்களில் எரிபொருள்களை எரிப்பதன் மூலம் வெளிபடும் கரியமில வாயு உமிழ்வை கணக்கிட கீழ்கண்ட சூத்திரம் பயன்படுகிறது.

மொத்த உமிழ்வு Eco2 = € ( FCi * NCVi * EFi* Ofi )

FCi எரிபொருளின் அளவு , டன்

NCVi எரிபொருளின் நிகர கலோரி மதிப்பு, கி.கலோரி/ கி.கிராம்

EFi எரிபொருளின் உமிழ்வு காரணி co2 டன்/ கி.கலோரி

OFi ஆக்சிஜனேற்ற காரணி ( oxidation factor)

எரிபொருளின் உமிழ்வு காரணியைப் பெற இரு வகைகள் உள்ளன. முதல் வகை இயல்பு நிலை உமிழ்வு காரணி, மிறிசிசி வெளியிட்டிருக்கும் எரிபொருளுக்கான இயல்பு நிலை மதிப்பையும் நிகர கலோரி மதிப்பையும் கொண்டு எரிபொருளின் உமிழ்வு காரணியை கண்டுபிடிக்கலாம்.

இரண்டாம் வகையில், எரிபொருளில் உள்ள கரிம அளவு, நிகர கலோரி மதிப்பு இவைகளை கொண்டு கணக்கிடப்படுகிறது.

நேரடி உமிழ்வு, உற்பத்தி செயலாக்கத்தில் வெளிப்படும் உமிழ்வு, வெளியிலிருந்து பெறப்படும் மின்சக்தி போன்றவைகளுக்கு கணக்கிடப்படும் மறைமுக உமிழ்வு ஆகிய அனைத்தையும் சேர்த்து வரும் மொத்த உமிழ்வை உற்பத்தி செய்யப்பட்ட இணையான பொருள்களின் அளவை கொண்டு வகுத்து வரும் மதிப்பு பசுமை வாயுவின் உமிழ்வு தீவிரமாக கொள்ளப்படுகிறது. இது அடிப்படை ஆண்டின் (base year) மதிப்போடு ஒப்பிடப்பட்டு அதிகமாக உள்ள மதிப்புக்கேற்ப கரிம வரவின சான்றிதழ்கள் (Carbon credit certificates) வழங்கப்படும். குறைவாக இருப்பின் நிறுவனம் அதற்குரிய சான்றிதழ்களை சந்தையில் பெற்று சமர்பிக்க வேண்டும்.

கரிம வரவின வர்த்தக திட்டம் 202324 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக கொண்டு, 2025-26 ஆண்டு முதல் இலக்குகளை நிர்ணயம் செய்து சரிபார்த்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இது வருங்காலத்தில் கரிம உமிழ்வை குறைத்து இந்தியாவின் இலக்குகளை அடைய ஏதுவாக இருக்கும்.




VEDIC HOMES
Enrich Your Lifestyle
VEDIC HOMES
PRESENTS
YOUR LAND.
OUR EXPERTISE.
SHARED SUCCESS.
JOINT VENTURES • TURNKEY CONSTRUCTION • PREMIUM RESIDENTIAL DEVELOPMENT
Partner with Vedic Homes for premium residential development in Chennai. Whether you're a landowner looking for a Joint Venture or an individual seeking a reliable Turnkey Project Construction partner, we provide complete end-to-end solutions—from architectural design and statutory approvals to quality construction and timely delivery.
ZERO INVESTMENT FROM LANDOWNER
MAXIMUM VALUE REALIZATION
PREMIUM APARTMENT DEVELOPMENT
TRANSPARENT & PROFITABLE PARTNERSHIP
WHY PARTNER WITH VEDIC HOMES?
HIGHER RETURNS THAN OUTRIGHT SALE
Retain ownership value and benefit from built-up area share, revenue appreciation, and long-term asset creation.
OWNERSHIP OF PREMIUM APARTMENTS
You get your share in the form of premium apartments in a high-quality development.
NO CONSTRUCTION BURDEN
We handle everything from approvals to handover. You enjoy the benefits.
TRUSTED DEVELOPER
Proven team with strong reputation & 12+ delivered projects.
12+
SUCCESSFULLY DELIVERED PROJECTS ACROSS CHENNAI
Sholinganallur
Velachery
Madhavaram
Teynampet
Thoraipakkam
West Mambalam
TURNKEY PROJECT CONSTRUCTION
We take care of everything, end-to-end
ARCHITECTURAL DESIGN
APPROVALS & PERMISSIONS
CONSTRUCTION EXECUTION
QUALITY ASSURANCE
TIMELY DELIVERY
On Time. On Budget. On Promise.
98401 61522
www.vedichomes.co.in
info.vedichomes@gmail.com
LET'S BUILD VALUE TOGETHER.


ASTRO MURALI
KP STELLAR ASTROLOGY
ANALYTICAL • PRECISE • TRUSTED
CLARITY TODAY.
BETTER TOMORROW.
GUIDANCE THAT CHANGES LIVES
Marriage & Love Compatibility
Timing, compatibility & future
Career, Job & Business Growth
Right path for success & financial growth
Childbirth & Conception Timing
Auspicious timing & remedies
Foreign Settlement Analysis
Insights for overseas opportunities
KP Horoscope Reading
Event promise, Dasa-bhukti, Bhava linkage
5000+ HOROSCOPES ANALYSED
1000+ HAPPY CLIENTS
4.9★ GOOGLE RATING
7904666907
consult@astromurali.com
www.astromurali.com

#LeanOnUs

GERI CARE
ELDERCARE BY GERIATRICIANS

# Your Trust Has Kept Us At #1

*Three Times Over.*

**#1**
**Geriatric Hospital In India**
*by Outlook - NEB Research Best Hospital Ranking 2026*

**#1**
**Geriatric Care Hospital in Tamil Nadu**
*by Times Health Survey 2026*

**#1**
**Skilled Nursing Facilities under Assisted Living category in Tamil Nadu**
*by Times Health Survey 2026*

HOSPITALS & CLINICS
T.NAGAR I ADAMBAKKAM I ADYAR
SKILLED NURSING FACILITIES
VELACHERY I ADYAR I ANNA NAGAR
THORAIPAKKAM I RA PURAM I MOGAPPAIR
ALSO IN BENGALURU, COIMBATORE

INDIA'S 1ST ELDER-CARE SERVICES BY GERIATRICIANS

99 444 59 444
www.gericare.in I enquiry@gericare.in

Enquire now